# DEPOSITION OF WITNESS

(Chapter XXV of BNSS)

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, NATHAM

| | | | |
|---|---|---|---|
| CC.No. | 196/2025 | LW- 1 | PW- 1 |
| Name | : அடைக்கம்மாள் ( புகார்தாரர்) | | |
| Father's/Husband's Name | : லெட்சுமணன் | | |
| Village | : வேம்பரளி | | |
| Taluk | : நத்தம் | | |
| District | : திண்டுக்கல் | | |
| Age | : 29/2026 | | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 12th day of March 2026

(எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்)

**(சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு அரசு தரப்பில் முதல் விசாரணை)**

1. நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வந்து கூலி வேலை செய்து வருகிறேன். இவ்வழக்கில் இறந்து போன லெட்சுமணன் என் கணவர் ஆவார். சுமார் 6 மாதங்களுக்கு முன்பாக ஒரு நாள் பகல் 1.30 மணியளவில் விளாம்பட்டி பிரிவில் என் கணவர் இருசக்கர வாகனத்தில் கிழக்கிலிருந்து மேற்கு நோக்கி வந்து கொண்டிருந்தபோது, திண்டுக்கலிலிருந்து மதுரை நோக்கி சென்று கொண்டிருந்த டாடா ஏஸ் போன்ற வாகனம் ஒன்று மோதி விபத்து ஏற்பட்டதாக என் கொழுந்தன் சதீஸ் என்பவர் போன் மூலம் சொன்னார். அதன் பேரில் நான் நத்தம் அரசு மருத்துவமனையில் வந்து என் கணவரை பார்த்தபோது என் கணவருக்கு நெற்றி பொட்டிலும், நெஞ்சிலும் மற்றும் உடம்பு முழுவதும் காயம்பட்டு சம்பவ இடத்திலேயே இறந்துவிட்டதாக கூறினார்கள். பின்னர் நானும், என் கொழுந்தன் சதீசும் நத்தம் காவல் நிலையம் சென்று புகார்

கொடுத்தோம். தற்போது என்னிடம் காட்டப்படும் புகார் மனு மற்றும் அதில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். **(புகார் மனு அ.த.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது**.) போலீசார் என்னை விசாரித்தனர்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

2) நான் காவல்நிலையத்தில் கொடுத்த புகார் மனுவில் என்ன எழுதி இருந்தது என்ற விபரம் தெரியுமா என்றால் தெரியும். அந்தப் புகாரை யார் எழுதினார்கள் என்றால் போலீசார் எழுதினார்கள். விளாம்பட்டிக்கு எதற்காக எனது கணவர் சென்றார் என்றால் எனது மாமனாரை பார்க்க சென்றார். விளாம்பட்டி செல்லும் சாலை ஆனது நத்தம் – மதுரை பைபாஸ் ரோட்டிற்கு கிழக்கு பக்கமாக உள்ளது என்றால் சரிதான். எனது கணவர் விளாம்பட்டி சாலையிலிருந்து நத்தம் – மதுரை பைபாஸ் சாலையில் கிழக்கிலிருந்து மேற்கு பக்கமாக சாலையின் குறுக்கே செல்லும்போது விபத்து ஏற்பட்டதாக தெரிய வந்ததாக புகார் மனுவில் தெரிவித்துள்ளேன் என்றால் சரிதான். விளாம்பட்டியில் இருந்து நத்தம் – மதுரை பைபாஸ் சாலையில் கிழக்கிலிருந்து மேற்காக செல்வதற்கு ரோட்டை கடப்பதற்கு முன்னாள் எம்எல்ஏ ஆண்டி அம்பலம் என்பவரது மகன் திருமணத்திற்கு முன்புவரை வழிகள் இல்லையென்றால் சரிதான்.

மேற்படி ஆண்டியம்பலம் மகனின் திருமணத்திற்கு செல்வதற்காக திருமணத்திற்கு வந்தவர்கள் அங்கிருந்த சென்டர் மீடியனை உடைத்து வழி ஏற்படுத்திக் கொண்டார்கள் என்றால் சரிதான். விளாம்பட்டி சாலையில் இருந்து நத்தம் – மதுரை மெயின் ரோட்டிற்கு கிழக்கிலிருந்து மேற்காக செல்வதற்கு அரசால் எவ்வித பாதை வசதியும் ஏற்படுத்திக் கொடுக்கப்படவில்லை என்றால் சரிதான். பொதுமக்களால் உடைக்கப்பட்ட சென்டர் மீடியனிலிருந்து விளாம்பட்டிக்கு போகும் சாலை 40 அடி இருக்கும் என்றால் இருக்கும். சென்டர் மீடியன் உடைக்கப்பட்ட பகுதி ஆனது வடக்கு தெற்காக சுமார் 20 அடி

இருக்கும் என்றால் இருக்கும். எனது கணவர் விபத்தில் இறந்ததாக சொல்லப்படும் பகுதியானது மேற்படி உடைக்கப்பட்ட சென்டர் மீடியனில் தெற்கு புறம் என்றால் சரிதான். விளாம்பட்டி பிரிவிலிருந்து 60 அடி தூரத்தில் உடைக்கப்பட்ட சென்டர் மீடியன் பகுதிக்கு கிழமேலாக ரோட்டின் குறுக்கே கடந்த போது விபத்து ஏற்பட்டது என்றால் சரிதான். அந்த இடத்தில் குறுக்கே கடந்து செல்வதற்கு பேரிகார்டோ, சிக்னல் போன்ற அமைப்போ இல்லை என்றால் சரிதான்.

நத்தம் – மதுரை நான்கு வழி சாலையில் கனரக வாகனங்கள் அடிக்கடி செல்லும் என்றால் சரிதான். பொதுவாக நான்குவழி சாலையில் ரோட்டை கடப்பதற்கு எந்தவித சிக்னலும் இல்லாமல் கிழக்கிலிருந்து மேற்கே திடீரென கடப்பது தவறு என்றால் சரிதான். எனது கணவருக்கு வாகன ஓட்டுனர் உரிமம் இல்லை என்றால் சரிதான். அவர் ஓட்டி வந்த வாகனத்திற்கு இன்சூரன்ஸ் இல்லை என்றால் சரிதான். வண்டிக்கான RC புக் ஆனது எனது பெயரிலோ, எனது கணவர் பெயரிலோ இல்லை என்றால் சரிதான். விபத்து சமயம் எனது கணவர் தலைக்கவசம் அணியவில்லை என்றால் சரிதான். எனது கணவர் தான் ஜாக்கிரதையாக ரோடை கடந்திருக்க வேண்டும் என்றால் சரிதான். விபத்தானது எனது கணவரின் அஜாக்கிரதை மற்றும் கவனக்குறைவால் தான் ஏற்பட்டது என்றால் சரிதான். விபத்து ஏற்படுத்தியதாக சொல்லப்படும் வாகனத்தை யார் ஓட்டி வந்தார் என்ற விபரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான்.

நான் சொன்னது போல் சொன்ன நேரத்தில் சொன்ன விதத்தில் சம்பவம் நடைபெறவில்லை என்றாலும் போலீசாரால் எழுதிக் கொடுத்த பொய் புகாரின் அடிப்படையில் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. இழப்பீடு பெற வேண்டி பொய் சாட்சி அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிரிக்கும், இந்த வழக்கிற்கும் சம்பந்தம் இல்லை என்றால் சரியல்ல.

**மறு விசாரணை : இல்லை.**

மேற்படி சாட்சியத்தை, சாட்சி சொல்ல–சொல்ல, என்னால் திறந்த நீதிமன்றத்தில் நேரடியாக தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைதிருத்தம் செய்யப்பட்டு, சரிபார்க்கப்பட்டு பதிவு செய்யப்பட்டது. அதை சாட்சி படித்துப்பார்த்து, சரி என ஒப்புக்கொண்டு கையொப்பம் செய்தார்.

J Aafreen Begum M.com., L.LM.,

Digitally signed by J Aafreen Begum M.com., L.LM.,
Date: 2026.03.12 16:22:08 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,
நத்தம்

DEPOSITION OF WITNESS

(Chapter XXV of BNSS)

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, NATHAM

| | | | |
|---|---|---|---|
| CC.No. | 196/2025 | LW- 2 | PW- 2 |

| | |
|---|---|
| Name | : மாணிக்கம் ( கண்ணுற்ற சாட்சி) |
| Father's/Husband's Name | : சின்னப்பொதியன் |
| Village | : விளாம்பட்டி |
| Taluk | : நத்தம் |
| District | : திண்டுக்கல் |
| Age | : 45/2026 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 12th day of March 2026

(எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்)

**(சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு அரசு தரப்பில் முதல் விசாரணை)**

1. நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வந்து விவசாய கூலி வேலை செய்து வருகிறேன். அ.சா.1ஐ தெரியும். ஆஜர் எதிரியை தெரியாது. சுமார் 6 மாதங்களுக்கு முன்பாக ஒரு நாள் மதியம் சுமார் 12.00 1.00 மணியளவில் விளாம்பட்டி விளக்கில் விபத்து நடந்ததாக அருகில் இருந்தவர்கள் சொன்னதன் பேரில் நான் சம்பவ இடம் சென்று பார்த்தபோது, இருசக்கர வாகனத்தில் சென்ற எங்கள் ஊரைச் சேர்ந்த வேம்பரளியில் வசிக்கும் அழகர் என்று நாங்கள் அழைக்கக்கூடிய எனக்கு தெரிந்த தம்பி ஒருவர் விபத்து ஏற்பட்டு இறந்து கிடந்தார். அவருக்கு நெற்றி மற்றும் காலில் ரத்தக் காயம் இருந்தது. மேற்படி வாகனத்தின் மீது மோதியது கார் என்று சொன்னார்கள். காரை நான் பார்க்கவில்லை. பின்னர் இறந்தவரின் உடலை நத்தம் அரசு மருத்துவமனைக்கு அவசர ஊர்தியில் எடுத்துச் சென்றார்கள். போலீசார் என்னை விசாரித்தனர்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

2) நான் சென்று பார்த்த போது விளாம்பட்டி பிரிவிலிருந்து தெற்கு பக்கம் கிழக்கிலிருந்து மேற்காக ரோட்டை திடீரென அழகர் என்பவர் இருசக்கர வாகனத்தில் கடக்கும் போது தான் விபத்து ஏற்பட்டதாக கேள்விப்பட்டேன் என்றால் சரிதான். விபத்து நடந்த போது அங்கு பேரிகார்டோ, சிக்னலோ இல்லை என்றால் சரிதான். சென்ட்ரல் மீடியினில் உடைத்து பாதை ஏற்படுத்தியது திருமணத்திற்கு வந்த பொதுமக்கள் என்றாலும், அவ்வாறான பாதை அரசால் ஏற்படுத்தப்படவில்லை என்றாலும் சரிதான். வடக்கில் இருந்து தெற்காக செல்லும் சாலையில் திடீரென்று கிழக்கிலிருந்து மேற்காக ரோட்டிற்கு குறுக்கே செல்வது தவறு என்றால் சரிதான். விளாம்பட்டி பிரிவில் ரோட்டிற்கு ஒட்டியே மூன்று, நான்கு வீடுகள் உள்ளது என்றால் சரிதான். அந்த பிரிவிலேயே பாஸ்ட் ஃபுட் கடை உள்ளது என்றால் சரிதான்.

நான் சொல்வது போல் சொன்ன விதத்தில் சம்பவ இடத்திற்கு செல்லவில்லை என்றாலும் இறந்து போன அழகர் என்பவர் எனக்கு தெரிந்தவர் என்பதால் அவருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. விபத்தானது இறந்து போனதாக சொல்லப்படும் அழகர் என்பவரின் அஜாக்கிரதை மற்றும் கவனக்குறைவால் தான் ஏற்பட்டது என்றால் சரிதான். எதிரி கவனக்குறைவாகவோ, அஜாக்கிரதையாகவோ வாகனத்தை ஓட்டி வரவில்லை என்றால் சரிதான். இழப்பீடு பெற வேண்டி பொய் சாட்சி அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிரிக்கும், இந்த வழக்கிற்கும் சம்பந்தம் இல்லை என்றால் சரியல்ல.

**மறு விசாரணை : இல்லை.**

மேற்படி சாட்சியத்தை, சாட்சி சொல்ல–சொல்ல, என்னால் திறந்த நீதிமன்றத்தில் நேரடியாக தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைதிருத்தம் செய்யப்பட்டு, சரிபார்க்கப்பட்டு பதிவு செய்யப்பட்டது. அதை சாட்சி படித்துப்பார்த்து, சரி என ஒப்புக்கொண்டு கையொப்பம் செய்தார்.

J Aafreen Begum M.com., L.LM.,

Digitally signed by J Aafreen Begum M.com., L.LM.,
Date: 2026.03.12 16:22:20 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,
நத்தம்

ஆண்டு பட்டிகை வழக்கு எண்.196/2025

## DEPOSITION OF WITNESS

(Chapter XXV of BNSS)

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, NATHAM

CC.No. 196/2025 LW- 6 PW- 3

| | |
|---|---|
| Name | : **வீரன் ( பார்வை மகஜர் சாட்சி)** |
| Father's/Husband's Name | : **திருமலை** |
| Village | : **விளாம்பட்டி** |
| Taluk | : **நத்தம்** |
| District | : **திண்டுக்கல்** |
| Age | : 65/2026 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 12th day of March 2026

(எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்)

**(சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு அரசு தரப்பில் முதல் விசாரணை)**

1. நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வந்து விவசாய வேலை செய்து வருகிறேன். தற்போது என்னிடம் காட்டப்படும் ஆவணத்தில் உள்ள 2வது சாட்சி கையொப்பம் என்னுடையது. சுமார் 6 மாதங்களுக்கு முன்பாக ஒரு நாள் விளாம்பட்டியில் விபத்து நடந்த இடத்தில் வைத்து போலீசார் சம்பவ இடத்தை பார்வையிட்டு படம் வரைந்து விசாரணை செய்தபோது சாட்சியாக கையொப்பம் கேட்டதன் பேரில் நானும், மாணிக்கம் என்பவரும் கையொப்பம் செய்தோம். **(பார்வை மகஜரில் உள்ள 2வது சாட்சி கையொப்பம் அ.த.சா.ஆ.2ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** போலீசார் என்னை விசாரித்தனர்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

2) நான் கையொப்பம் செய்த ஆவணத்தில் என்ன எழுதி இருந்தது என்ற விபரங்கள் எனக்கு தெரியாது என்றால் சரிதான். ஆங்கிலத்தில் எழுதப்பட்டிருந்தது. நான் கையொப்பம் செய்த ஆவணத்தில் மாணிக்கம் என்பவர் கையொப்பம் செய்ததாக நான் சொல்லியுள்ள நிலையில் அவரை தவிர வேறு யாரும் கையொப்பம் செய்தார்களா என்ற விபரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். இறந்ததாக சொல்லப்படும் நபர் எனது உறவினர் என்றால் இல்லை. நான் அவரை பார்த்தது இல்லை. இறந்தவரின் சொந்த ஊர் விளாம்பட்டி என்று வழக்கில் சாட்சி தெரிவித்ததற்கு மாறாக சொல்கிறேன் என்றால் அது பற்றி தெரியாது. நான் சம்பவ இடத்தில் வைத்து கையொப்பம் செய்யவில்லை என்றால் சரியல்ல. சம்பவ இடத்திற்கு நான்கு வீடுகள் மற்றும் ஒரு பாஸ்ட் புட் கடை உள்ளது என்றால் சரிதான். சம்பவ இடத்திற்கு தெற்கு பக்கமாக 40, 50 அடி தூரத்தில் பேக்கரி, வீடுகள் உள்ளது என்றால் சரிதான். மேற்படி அமைப்புகள் உள்ளதை போலீசார் குறித்துக்கொண்ட பிறகு அதில் நான் கையொப்பம் செய்யவில்லை என்றால் சரிதான்.

**மறு விசாரணை : இல்லை.**

மேற்படி சாட்சியத்தை, சாட்சி சொல்ல–சொல்ல, என்னால் திறந்த நீதிமன்றத்தில் நேரடியாக தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைதிருத்தம் செய்யப்பட்டு, சரிபார்க்கப்பட்டு பதிவு செய்யப்பட்டது. அதை சாட்சி படித்துப்பார்த்து, சரி என ஒப்புக்கொண்டு கையொப்பம் செய்தார்.

J Aafreen Begum M.com., L.LM.,

Digitally signed by J Aafreen Begum M.com., L.LM.,
Date: 2026.03.12 16:22:28 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,
நத்தம்